**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**ஏ.ஆர்.ஓ.பி. 59/2021**

**நாள்.29.01.2024**

ம.சா.1 திரு. ஸ்டாலின் சாத்தையா மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய ஆர்ஜித நிலமானது சூரங்கோட்டை கிராமத்தில் உள்ள ஐயர்மடத்தில் உள்ளது. என்னுடைய நிலமானது தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்கு கையகப்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அதற்காக அனுப்பப்பட்ட அறிவிப்பை நான் பார்த்தேன். எனக்கு கொடுக்கப்பட்ட இழப்பீடு தொகை குறைவாக இருப்பதால் அது சம்பந்தமாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடம் மனுத்தாக்கல் செய்தேன். மாவட்ட ஆட்சியரிடம் தாக்கல் செய்த மனுவின் நகலை இந்த மனுவில் தாக்கல் செய்துள்ளேனா? என்றால் செய்துள்ளேன். நான் அவ்வாறு சொல்வது தவறு என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியர் உத்தரவு செய்யப்பட்ட உத்தரவின்பேரில்தான் நான் இந்த மனுவை தாக்கல் செய்தேன். இந்த மனுவில் நான் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரை தரப்பினராக சேர்க்கவில்லை. என்னுடைய நிலமானது நஞ்சை நிலமாகும். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் சூரங்கோட்டை கிராம பஞ்சாயத்து என்றால் சரிதான். முதுனாள் என்ற கிராமமும் சூரங்கோட்டை பஞ்சாயத்திற்குட்பட்டதுதான். மேற்படி அறிவிப்பு செய்த பின்னிட்டு கையகப்பட்ட நிலத்தின் மதிப்பானது அதிகமாக உள்ளது என்று காண்பிக்க நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்காக உற்பத்தி செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியர் ஆர்ஜித நிலத்தை பார்வையிட்டதான் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரியல்ல. நயினார்கோவில் செல்லும் பிரதான சாலைக்கு தொலைவில்தான் உள்ளது என்றால் சரியல்ல. எனது முதல் பிரமாண பத்திரிக்கையில் சொல்லப்பட்ட விபரங்களை நான் தாக்கல் செய்த

மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.  நான் இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்து அதிக இழப்பீடு பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் ஆவண்ங்களை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் வசித்து வரும் ஊரில் எந்தவித மார்கெட்டும் இல்லை என்றாலும் பொருட்கள் வாங்க பிரதாக கடைகள் இல்லை என்றாலும் நான் எந்த பொருட்களும் வாங்க வேண்டும் என்றால் இராமநாதபுரம் டவுனில் உள்ள அரண்மனைக்குத்தான் வரவேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு அருகில் வீட்டுமனைகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. சந்தை மதிப்பை கூட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு அருகில் மனைகள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.  நான் மாவட்ட ஆட்சியரிடம் மனுத்தாக்கல் செய்யும்போது எந்தவித ஆவணங்களையும் என் மனுவுடன் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு ஒப்படைத்திருந்தால் அந்த மனுவுடன் ஒப்படைத்த ஆவணங்களை இந்த மனுவுடன் ஒப்படைத்திருக்கவேண்டும்.  நான் மாவட்ட ஆட்சியரிடம் எந்தவித ஆவணங்களும் ஒப்படைக்கவில்லை என்பதால் இந்த மனுவில் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் மாவட்ட ஆட்சியர் ஆர்ஜிதம் செய்த நிலத்திற்கு செண்ட்டுக்கு ரூ.1 லட்சம் கூடுதல் இழப்பீடாக கொடுக்க வேண்டி அந்த மனுவை தாக்கல் செய்தேன்.  நான் கொடுத்த மனுவின்பேரில் மாவட்ட ஆட்சியர் முறையாக விசாரணை செய்துதான் அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றும் அதனால் மாவட்ட ஆட்சியர் தாக்கல் செய்து உத்தரவின்பேரில் இந்த மனுவானது சட்டப்படி நிலைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய ஆர்ஜித செய்யப்பட்ட நிலத்திற்கு எப்எம்வி மற்றும் வருவாய்த்துறை ஆவணங்களை என்னுடைய மனுவுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.  நான் கேட்டுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.  மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த

உத்தரவு சரியானது என்றால் சரியல்ல.

2ம் எதிர்மனுதாரர்தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .